20.3.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கால்நடை மருத்துவப் பட்டமளிப்பு விழா: சென்னையில் இன்று நடைபெறுகிறது

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் 17-ஆவது பட்டமளிப்பு விழா சென்னை வேப்பேரியில் உள்ள சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் வெள்ளிக்கிழமை (மார்ச் 20) நடைபெற உள்ளது. தேர்வுகளில் சிறப்பிடம் பெற்ற 34 மாணவ, மாணவிகளுக்கு 98 விருதுகளும், பதக்கங்களும் விழாவில் வழங்கப்பட உள்ளன. இதுகுறித்து பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ். திலகர் அளித்த பேட்டி: பட்டமளிப்பு விழாவில் மொத்தம் 359 மாணவ, மாணவிகளுக்கு பட்டச் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன. இவர்களில் 250 பேர் நேரடியாகவும், 109 பேர் அஞ்சல் மூலமாகவும் பெற உள்ளனர். சிறப்பிடம் பெற்ற 34 பேருக்கு 98 விருதுகளும், பதக்கங்களும் விழாவில் வழங்கப்பட உள்ளன. இதில் பி.வி.எஸ்.சி. முடித்த ஜிதேந்திர குமார் யாதவ் என்ற ஒரே மாணவர் சிறந்த கல்வித் திறனுக்காக 18 விருதுகளைப் பெற உள்ளார். மாணவர்களின் தேர்ச்சித் திறனை மேலும் மேம்படுத்தும் வகையில் 2015-16 கல்வியாண்டில் மேலும் 3 புதிய விருதுகள் அறிவிக்கப்பட உள்ளன என்றார் அவர்.

### கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம்

நன்னிலம் அருகே தட்டாத்திமூலை கிராமத்தில் புதன்கிழமை கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் முகாமை மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் தொடங்கிவைத்தார். மாவட்டத்தில் 8-வது சுற்றாக கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்படுகிறது.

கிராமம்தோறும் காலை 6 முதல் 9 மணி, மாலை 3 முதல் 5 மணி வரை முகாம் நடைபெறும். எனவே கால்நடை வளா்ப்பவர்கள் தங்களிடமுள்ள 4 மாதத்துக்கு மேல் வயதுள்ள கன்றுகளுக்கும், சினைப் பசுக்கள், கறவைப் பசுக்கள், எருமைகள் மற்றும் எருதுகளுக் கும் தடுப்பூசி போட்டுக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது என்றார் ஆட்சியர் மதிவாணன். முகாமில் கோட்டாச்சியா் முத்துமீனாட்சி, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநா் டேவிட், உதவி இயக்குநர் தனபாலன், நோய் புலனாய்வுத் துறை உதவி இயக்குநா் சுப்பையன் (நாகப்பட்டினம்) வட்டாட்சியா் அம்பிகாபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**<u>நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலமாக 5 வட்டாரங்களில் ஆடு, மாடு வழங்க 981 பயனாளிகள் தேர்வு</u>**

நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலமாக நிலமற்றோர் வாழ்வாதார மேம்பாட்டுக்காக ஆடு, பசு மாடுகள் வழங்கும் திட்டத்தில் தகுதியானோர் பயன்பெற ஆட்சியர் மு.கருணாகரன் அழைப்பு விடுத்துள்ளார். இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கடையம், பாப்பாக்குடி, சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர், குருவிகுளம் ஆகிய 5 வட்டாரங்களில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஆடு, பசுங்கன்றுகள் வழங்கப் படவுள்ளன. இத் திட்டத்தில் பயன்பெறுவோர் விதவை, நிலமற்ற விவசாய தொழிலாளி, ஆடு, மாடு வளர்ப்பில் ஆர்வமிக்கவராக இருக்க வேண்டும். ஏற்கெனவே ஆடு, மாடு வைத்திருக்கக் கூடாது. தமிழக அரசின் இலவச ஆடு, மாடு வழங்கும் திட்டத்தில் பயன் பெற்றவராகவும் இருக்கக் கூடாது. ஒரு பயனாளிக்கு ரூ.12 ஆயிரம் மதிப்பில் 4 ஆடுகள் அல்லது ஒரு பசுங்கன்று வழங்கப்படும். பயனாளி களின் பங்குத் தொகையாக ஆதிதிராவிடராக இருந்தால் 10 சதவீதம், இதர இனத்தவர்கள் 20 சதவீதம் செலுத்த வேண்டும். மேலும், காப்பீட்டுத்

தொகை செலுத்தி காப்பீடு செய்ய வேண்டும். கடையம் வட்டாரத்தில் கீழக்கடையம் 1, 2, கடையம் பெரும்பத்து 1, 2, மேலக்கடையம், வெங்கடாம்பட்டி 1, 2, ஐந்தான்கட்டளை ஆகிய 8 நீர்வடிப்பகுதிகளுக்கு தலா 31 பயனாளிகள் வீதம் 248 பேருக்கு ஆடு, மாடு வழங்கப்படும். பாப்பாக்குடி வட்டாரத்தில் பாப்பாக்குடி 1, 2, வடக்கு அரியநாயகிபுரம் 1, 2, முக்கூடல், ஓடைமறிச்சான், உடையாம்புளி ஆகிய 7 நீர்வடிப் பகுதிகளுக்கு தலா 35 பேர் வீதம் 245 பேருக்கு ஆடு, மாடு வழங்கப்படும். சங்கரன்கோவில் வட்டாரத்தில் வாடிக்கோட்டை, வடக்குப்புதூர், மணலூர், பெரும்பத்தூர், தெற்கு சங்கரன்கோவில் ஆகிய 5 நீர்வடிப் பகுதிகளுக்கு தலா 25 பேர் வீதம் 125 பேருக்கும், வயலி, குவளைக் கன்னி, கரிவலம்வந்தநல்லூர், பெரியூர், பனைக்குடி, பருவக்குடி ஆகிய 6 நீர்வடிப்பகுதிகளில் தலா 20 பேர் வீதம் 120 பேர் தேர்வு செய்யப்பட வுள்ளனர். வாசுதேவநல்லூர் வட்டாரத்தில் ஆலங்குளம், மலையடி குறிச்சி, தாருகாபுரம், அரியூர், நெல்கட்டும்செவல் 1, 2, சிந்தாமணி ஆகிய 7 பகுதிகளில் தலா 18 பேர் வீதம் 126 பேரும், கூடலூர், தென்மலை, ராமநாதபுரம், விஸ்வநாதபேரி 2 ஆகிய பகுதிகளில் தலா 10 பேர் வீதம் 40 பேருக்கு ஆடு, மாடு வழங்கப்படும். குருவிகுளம் வட்டாரத்தில் சாயமலை, கே. கரிசல்குளம், மருதங்கிணறு, மலையன்குளம், மகேந்திர வாடி, பழங்கோட்டை, நாலந்துல்லா ஆகிய 7 நீர்வடிப்பகுதிகளில் தலா 11 பேர் வீதம் 77 பேர் தேர்வு செய்யப்படவுள்ளனர். எனவே, இந்த வட்டாரங்களைச் சேர்ந்த தகுதியான பயனாளிகள் அந்தந்த நீர்வடிப்பகுதி சங்கத் தலைவர்கள், வளர்ச்சி அணி உறுப்பினர்களை அணுகி பயன்பெறலாம் என்றார் ஆட்சியர்.

## <u>மானிய விலையில் வேளாண் கருவிகள் விநியோகம்</u>

தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் (பயறு வகை) கீழ் கடலூர் வட்டாரத்தில் வேளாண்மை பணிக்கான ரோட்டவேட்டர் கருவி மானியத்தில் வழங்கும் நிகழ்ச்சி கடலூர் அலுவலகத்தில் அண்மையில்

நடைபெற்றது. வேளாண்மை இணை இயக்குநர் த.தனசேகரன் பயனாளிகளுக்கு கருவிகளை வழங்கினார். அப்போது, விவசாயிகள் கருவியை முறையாகப் பயன்படுத்தி, நிலத்தை நன்றாக உழுது பண்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமென கேட்டுக்கொண்டார். வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) அரிதாஸ், விவசாயிகளுக்கு பம்ப்செட்டுகள், மழைத்தூவான்கள், தெளிப்பான்கள், நெல் நடவு இயந்திரம் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்களை மானியத்தில் வழங்கும் திட்டம் குறித்து விவரித்தார். கடலூர் வேளாண் உதவி இயக்குநர் சீ. இளவரசன் வரவேற்றார். வேளாண்மை அலுவலர் பி.சின்னக்கண்ணு நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகளை பங்குதாரர் ஆக்கணும்!**

விவசாயிகளின் நிலங்களை, அவர்களின் சம்மதம் இல்லாமல் கையகப்படுத்துவதை, எங்கள் கட்சி ஆதரிக்காது. மேலும், நிலங்களை கையகப்படுத்தும் போது, விவசாயிகளுக்கு உரிய விலை கொடுக்க வேண்டும். அத்துடன், கையகப்படுத்தப்படும் நிலங்களில் மேற்கொள்ளப் படும், வளர்ச்சிப் பணிகளில், விவசாயிகளையும் ஒரு பங்குதாரராக சேர்க்க வேண்டும். நாங்கள் விவசாயிகளுக்கு எதிரானவர்கள் என்ற, காங்கிரசின் குற்றச்சாட்டை மறுக்கிறேன். பிரகாஷ் சிங் பாதல்,பஞ்சாப் முதல்வர்-சிரோன்மணிஅகாலிதளம்

மக்களைமுட்டாளாக்கும்திட்டம்!

ஜம்மு - காஷ்மீரில் ஆட்சியில் உள்ள மக்கள் ஜனநாயக கட்சி - பா.ஜ.,வின் குறைந்தபட்ச பொது செயல்திட்டம், மக்களை

முட்டாளாக்கும் திட்டம். மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும், அரசியல் சட்டத்தின், 370வது பிரிவு விஷயத்தில், பா.ஜ., அமைதியாக இருப்பதை, தங்களுக்கு கிடைத்த பரிசு என, மக்கள் ஜனநாயக கட்சியினர் நினைக்கின்றனர். ஆனால், வேறு வழி இல்லாமல் தான், பா.ஜ.,வினர் அமைதி காக்கின்றனர். ஒமர் அப்துல்லா, தலைவர் - தேசிய மாநாட்டுகட்சி

நாடுமுழுவதும்நியமிக்கவேண்டும்!

இளம் பெண்களை, சிறப்பு போலீஸ் அதிகாரிகளாக நியமிக்க, உ.பி., மாநில அரசு முடிவு செய்தது சரியானதே. இதே முறையை, நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களும் பின்பற்ற வேண்டும். இதனால், வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கும், போலீசாருக்கும் இடையேயான இடைவெளி குறையும். பாதிக்கப்பட்ட பெண்கள் தைரியமாக புகார் கொடுக்க முன்வருவர்.மேனகா,மத்திய அமைச்சர் - பா.ஜ.,

**<u>கறவை மாடு வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி திறன் மேம்பாடு பயிற்சி</u>**

கிருஷ்ணகிரி:தர்மபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் சார்பில், கிருஷ்ணகிரி ஆவின் ஒன்றியத்தில், பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாடு பராமரிப்பு மற்றும் பால் உற்பத்தி குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி நடந்தது.ஆவின் பொது மேலாளர் செல்வகுமார் தலைமை வகித்தார். இதில், கறவை மாடு தேர்வு மற்றும் பராமரிப்பு குறித்து டாக்டர் அனல்விழி, தீவன மேலாண்மை குறித்தும், அசோலா வளர்ப்பு புல்வெட்டும் கருவியும் அதன் பயன்கள் குறித்து டாக்டர் அனிதா, இனப்பெருக்கம், கருவூட்டல், கன்று வளர்ப்பு குறித்து, கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடு மற்றும் சங்க உறுப்பினர்களின் பங்கு குறித்து டாக்டர் நாகராஜன், பசுந்தீவன வளர்ப்பு குறித்து டாக்டர் ரமேஷ் ஆகியோர் விளக்கி பேசினர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள, எட்டு யூனியன்களை சேர்ந்த கால்நடை வளர்ப்போருக்கு, நாள் ஒன்றுக்கு

ஒரு யூனியனை சேர்ந்தவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுவதாகவும், இதனையடுத்து, தர்மபுரி மாவட்டத்தில் உள்ளவர்களுக்கும் தொடர்ந்து, இப்பயிற்சி வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

செட்டியபட்டி : செட்டியபட்டி ஊராட்சி,வேளாங்கன்னிபுரத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. ஆதிலட்சுமிபுரம் கால்நடை ஆஸ்பத்திரிக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களில்,இம்மாதம் 5ம் தேதி முதல் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடக்கிறது. வேளாங்கண்ணிபுரத்தில் கால்நடை உதவி டாக்டர் கலைவாணி தலைமையில் முகாம் நடந்தது. 100 கால்நடைகளுக்கு தடுப்பூசி சிகிச்சை தரப்பட்டது. கால்நடை பராமரிப்பு துறை கூடுதல் இயக்குநர் மகேந்திரன் ஆய்வு செய்தார். மண்டல இணை இயக்குநர் விக்டர் ஜெபராஜ், உதவி இயக்குநர்கள் துரைச்சாமி,ரவிச்சந்திரன் பங்கேற்றனர்.

## <u>ஐநூறு மரக்கன்று நடுவதற்கு திட்டம்</u>

பழநி : மாநில நெடுஞ்சாலைதுறையினர் பராமரிப்பில் உள்ள பழநி-திண்டுக்கல் ரோடு சிவகிரிபட்டி பஞ்சாயத்து அலுவலகம் முதல் புதுதாராபுரம் ரோடு வரை ரூ.11.40 கோடி செலவில் நான்கு வழிபாதையாக மாற்றும் பணி நடக்கிறது. இதில் நடைபாதை அமைப்பதற்காக 136 மரங்களை அகற்றும் பணி நடந்து வருகிறது. இதுகுறித்த செய்தி தினமலர் நாளிதழில் வெளியானது. அதேசமயம் பழநி-திண்டுக்கல் ரோட்டில் நிழல் தரும் 500 புதிய மரக்கன்றுகள் ஒருவாரகாலத்தில் நடப்படவுள்ளதாக நெடுஞ்சாலைதுறையினர் தெரிவித்தனர்.

## தென்னை ஊடுபயிராக கோகோ சாகுபடி

தேனி : தென்னையில் ஊடுபயிராக கோகோ சாகுபடி செய்ய வேண்டும் என விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. தென்னையில் ஊடுபயிராக கோகோ சாகுபடி செய்ய இதுவே ஏற்ற தருணம். தென்னை யில் இரண்டு மரங்களுக்கு நடுவில் ஒரு கோகோ சாகுபடி செய்யலாம். எக்டேருக்கு 500 நாற்றுகள் வரை நடவு செய்யலாம்.இதன் மூலம் குறைந்த முதலீட்டில் அதிக லாபம் கிடைக்கும். தென்னையும், கோகோ வும் ஒன்றுக்கொன்று வளர்ச்சிக்கு உதவுகின்றன. இதனால் விளைச்சல் அதிகரிக்கும். ஆண்டிற்கு 800 கிலோ இலை உதிர்வதால் மண்ணின் அங்கக சத்து அதிகரிக்கும். சிறந்த முறையில் களைக்கட்டுப்பாடு செய்யப்படுகிறது. கோகோ பழத்தின் ஓடு உரமாகவும், மாட்டுத்தீவன மாகவும் பயன்படுகிறது. தவிர 30 ஆண்டுகள் வரை பலன் தரும். தோட்டத்தில் மண் அரிமானம் தடுக்கப்படும். மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கப்படும். விவசாயிகள் தோட்டக்கலை அலுவலர், உதவி அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சோனா கல்லூரியில் வேளாண் கருத்தரங்கம்

சேலம்:சேலம் சோனா கல்லூரியில், நேற்று வேளாண் கருத்தரங்கம் நடந்தது. சேலம் இந்திய தொழில் கூட்டமைப்பு மற்றும் சோனா தொழில் நுட்ப கல்லூரி இணைந்து நேற்று, வேளாண் துறை சார்பான கருத்தரங்கை நடத்தியது. சேலம் சோனா கல்லூரியில் நடந்த கருத்தரங்கில், இந்திய தொழில் கூட்டமைப் தலைவர் ராஜேஸ்குமார் வரவேற்றார். சோனா தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் ஜெயபிரகாஷ் தலைமையுரை ஆற்றினார். இந்திய தொழில் கூட்டமைப்பு உதவி

தலைவர் விமலன், சேலம் ஆவின் பொது மேலாளர் சாந்தி, வேளாண் இணை இயக்குனர் (ஓய்)கனகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம்

பெரம்பலூர்:எளம்பலூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், ஏல முறையில் பருத்தி விற்பனை நடந்தது.இதில், 83 விவசாயிகள், 390 குவிண்டால் பருத்தியை கொண்டு வந்தனர். எட்டு வியாபாரிகள் மற்றும் இந்திய பருத்தி கழக அலுவலர்கள், விவசாயிகள் கொண்டு வந்த பருத்தியின் தரத்தை சோதித்து, அதற்கான விலையை அலுவலர்களிடம் அளித்தனர். அதிக விலை நிர்ணயித்து கேட்ட வியாபாரிக்கு, பருத்தி விற்பனை செய்யப்பட்டது.

## விவசாயிகள் கவனத்திற்கு

ராமநாதபுரம் : ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் மார்ச் 27ல் பகல் 11.30 மணிக்கு விவசாயிகள் குறை தீர் கூட்டம் நடக்கிறது. கலெக்டர் நந்தகுமார் தலைமையில் நடக்கும் கூட்டத்தில் விவசாயிகள் குறைகளை நேரடியாகவும், மனுக்களாகவும் கொடுத்து பயனடையலாம்.

## ரூ. 90 லட்சத்திற்கு பருத்தி ஏலம்

நாமக்கல்:நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 90 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது.நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 5,500 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.டி.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,789, குறைந்தபட்சமாக, 4,369 ரூபாய், சுரபி ரகம் அதிக பட்சமாக, 5,069, குறைந்த பட்சமாக, 4,579 ரூபாய். ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக,

4,169, குறைந்த பட்சமாக, 3,719 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 90 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது.விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

**நாமக்கல்லில்மார்ச் 27ல் விவசாய குறைதீர் கூட்டம்**

நாமக்கல்:"விவசாய குறைதீர் கூட்டம், வரும், 27ம் தேதி, மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது' என, மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்துள்ளார். இது குறித்து,அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், வரும், 27ம் தேதி, காலை, 10.30 மணிக்கு, மாவட்ட கலெக்டர் தலைமையில், விவசாய குறைதீர் கூட்டம் நடக்கிறது. விவசாய அமைப்பு பிரதிநிதிகள், விவசாயிகள் பங்கேற்று, அரசின் திட்டங்கள் தொடர்பான ஆலோசனை, புகார், கோரிக்கை தொடர்பாக மனுக்கள் வழங்கலாம்.பின்னர், அதுதொடர்பாக, நிவாரணம் பெறலாம். எனவே, விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் நடத்துவோர், குறைதீர் கூட்டத்தில் பங்கேற்று பயனடைய வேண்டும். மற்றபடி, நிலம் தொடர்பான விவகாரங்கள், வரும், 25ம் தேதி, காலை, 10.30 மணிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடக்கும் கூட்டத்தில் பங்கேற்று, கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு கோழி வளர்ப்பு பயிற்சி**

அரியலூர்:தமிழ்நாடு கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும், அரியலூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை இணைந்து, விவசாயிகளுக்கான இறைச்சி கோழி வளர்ப்பு பயிற்சி முகாம் நடத்தியது.அரியலூர் மேல அக்ரஹாரம் தெரு, கால்நடை கிளை நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில், கீழப்பழுவூர் செந்தில்குமார்,

வெண்ணிலா உள்பட ,50க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு, இறைச்சி கோழி வளர்ப்பு பற்றிய பயிற்சியை, திருச்சியிலுள்ள கால்நடை பல்கலைகழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர்கள் ரிச்சர்டு ஜெகதீசன், சங்கிலி மாடன் உள்ளிட்டோர் வழங்கினர்.பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு, அரியலூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் டாக்டர் மோகன் சான்றிதழ் வழங்கினார். நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் டாக்டர் பாஸ்கரன், லால்குடி டாக்டர் சுப்பையா மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**<u>கால்நடை நோய் புலனாய்வுப்பிரிவுஉதவி இயக்குநர் அலுவலகம் திறப்பு</u>**

புதுக்கோட்டை: புதுக்கோட்டையில், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில், கால்நடை உதவி இயக்குநர் அலுவலக வளாகத்தில், புதிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு உதவி இயக்குநர் அலுவலகத்தை, கலெக்டர் கணேஷ் தலைமையில், அமைச்சர் விஜயபாஸ்கர் திறந்து வைத்தார். கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை கண்டறிந்து, அவற்றை குணப்படுத்தவும், நோய்கள் ஏற்படாமல் தடுக்கவும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இதுவரை, இந்த மாவட்டத்துக்கான கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு அலுவலகம், தஞ்சாவூரில் செயல்பட்டு வந்தது. மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, இங்கு புதிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு உதவி இயக்குநர் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.இதன் மூலம், கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை கண்டறிதல், நோய்களை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நோய் பாதித்த கால்நடைகள் இருக்கும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று , அதனை பரிசோதித்து, தடுப்பு நடவடிக்கை போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், ஆய்வகத்திற்கு தேவையான உபகரணங்கள், மருந்து பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள்,

.50 லட்சம் மதிப்பில் கொள்முதல் செய்யப் படவுள்ளது. நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மோகனரெங்கன், துணை இயக்குநர் ரவீந்திரன், உதவி இயக்குநர்கள் தேவதாஸ், சின்னத்துரை, ரவிச்சந்திரன், சம்பத், குருசாமி, மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் செல்லத்துரை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை உயர்வு**



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில், முட்டை விலையில் 10 காசு உயர்த்தப்பட்டுள்ளது.நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று நடந்தது. இதில், முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலையில் மாற்றம் செய்துள்ளது. அதன்படி, ஒரு முட்டை விலையில் 10 காசு உயர்த்தி 275 காசாக நிர்ணயம் செய்தது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை உயர்ந்துள்ளதால், நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளது என்று பண்ணையாளர்கள் கூறினர். ஒரு கிலோ முட்டைக் கோழி விலை ரூ41 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி 77 ஆகவும் நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம்: சென்னை 300, பெங்களூர் 290, மைசூர் 290, ஹைதராபாத் 260, மும்பை 298, விஜயவாடா 265, கொல்கத்தா 315, பர்வாலா 254, டெல்லி 265 காசுகள்.

## பி.ஏ.பி. வாய்க்கால் - உப்பாறு கால்வாய் இணைக்கும் பணி இன்று துவக்கம்?

தாராபுரம், : 1968ம் ஆண்டு உப்பாறு அணை கட்டப்பட்டது. இந்த அணைக்கு உட்பட்டு 6,060 ஏக்கர் பாசனம் இருந்தது. கடந்த 30 ஆண்டுகளாக அணைக்கு நீர்வரத்து இல்லாமல் போனதால், இரண்டு கால்வாய் பாசனமும் அழிந்து போனது. 1968ம் அண்டு முதல் 1988 வரை சுமார் 20 ஆண்டுகள், பி.ஏ.பி திட்டத்திலும், பருவ மழையின் காரணமாக வும் அணைக்கு தண்ணீர் வரத்து இருந்ததால், 2 போக நெல் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. அதன் பிறகு பி.ஏ.பி திட்டத்தில் ஏற்பட்ட பிரச்னைகளாலும், பருவமழை பொய்த்துப் போனதாலும் அணைக்கு நீர்வரத்து இல்லாமல் போனது. இதனால் கடந்த 25 ஆண்டுகளாக நஞ்சை நிலமாக இருந்த பெரும்பாலான நிலம், வறட்சியின் காரணமாக வானம் பார்த்த பூமியாக மாறிவிட்டது. குடிநீருக்காக அணையை நம்பி இருந்த 7 ஊராட்சிகளுக்கு உட்பட்ட, 50க்கும் மேற்பட்ட கிராம மக்கள், குடிக்க தண்ணீர் இன்றி சிரமத்திற்கு உள்ளானார்கள். ஒவ்வொரு ஆண்டும் பி.ஏ.பி திட்டத்தில் வழங்க வேண்டிய உபரி நீரை உப்பாறு அணைக்கு வழங்க வேண்டும் என கேட்டு இப்பகுதி மக்கள் போராடுவதும், பி.ஏ.பி தண்ணீரை தரக்கூடாது என்று பி.ஏ.பி விவசாயிகள் போராடுவதும் வழக்கமாக இருந்து வந்தது. தண்ணீர் கேட்டு உப்பாறு பாசன விவசாயிகள் தொடர்ந்து கோரிக் கை வைத்து வந்தனர். பி.ஏ.பி திட்டத்தில் பாசன பரப்பு குறைந்து விட்டதால், மிச்ச மாகும் தண்ணீரை உப்பாறு பாசன பகுதிக்கு வழங்க பொதுப்பணித் துறை திட்டமிட்டது. அதன்படி பி.ஏ.பி பாசன கால்வாய் களோடு உப்பாறு அணையின் இடது மற்றும் வலது கரை கால்வாய்களை இணைக்க திட்டம் போடப்பட்டது. இதற்காக ரூ.8 கோடியே 20 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. இந்நிலையில், இடது கரை கால்வாயை

இணைக்கும் திட்டத்திற்கு, பி.ஏ.பி பாசன விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்ததால், இடது கரை கால்வாய் திட்டம் துவங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து விவசாயி மயில்சாமி என்பவர் கூறியதாவது: நிலங்களை அரசு கையகப்படுத்திவிட்டு விவசாயிகளுக்கு பணம் தராததால், பணத்தை கொடுத்துவிட்டு புதிய திட்டத்தை துவங்குங்கள் என்று சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளோம். அதனால் தான் இடது கரை கால்வாய் திட்டம் துவங்க முடியாத நிலையில் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். திட்டத்திற்காக அரசு ஒதுக்கிய நிதி, நீண்ட காலம் செலவிடப்படாமல் இருப்பதால், திரும்பப் பெறும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பொதுப்பணித்துறை வலது கரை கால்வாயை இணைக்கும் திட்டத்தில் தீவிரம் காட்டிவருகிறது. இந்த நிலையில் கால்வாய் வெட்டப்படும் பகுதியில் உள்ள விவசாயிகள், கையகப்படுத்தும் நிலத்திற்கு உரிய தொகை கொடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்து வருகின்றனர். உரிய தொகை கிடைக்காவிட்டால் நீதிமன்றத்தை அணுக உள்ளதாக தெரிவிக்கின்றனர். சிலர் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் வருகின்றனர். ஆளும் கட்சியினர் எதிர்ப்பு தெரிவிக்கும் விவசாயிகளை நேரில் சந்தித்து சமாதானம் செய்து வருகிறார்கள். அவர்களது பேச்சு விவசாயிகளுக்கு நம்பிக்கையை தராததால் வருவாய் கோட்டாட்சியர் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். இதற்கிடையே திட்டத்தை எப்படியாவது துவங்க வேண்டும் என்கிற நோக்கத்தில் ஆளும் கட்சியினர் வலது கரை கால்வாய் இணைப்பு பணியை இன்று (வெள்ளி) பூமி பூஜை போட்டு துவங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர். இந்நிலையில், இந்த திட்டத்தினால் பி.ஏ.பி பாசனம் அழிந்து போகும் என தெரிவித்து, பாசன சங்க தலைவர் மெடிக்கல் பரமசிவம் நீதிமன்றத்தை அணுகி உள்ளார்.

## சிட்டுக் குருவிகளுக்கு செயற்கை கூடுகள்

ஊட்டி, : உலக சிட்டுக்குருவி தினத்தை முன் னிட்டு இன்று ஊட்டியில் உள்ள அரசு கலைக்கல்லூரியில் விலங்கியல் மற்றும் வன விலங்கு உயிரியல் துறை சார்பில் செயற்கை கூடுகள் அமைத்து ஆய்வு மேற்கொள்ளும் நிகழ்ச்சி துவக்கப்படுகிறது. உணவு தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் சிட்டுக்குருவி தற்போது அழிந்து வரு கிறது. இதனால், இவை களை பாதுகாக்கும் நோக் கில் ஆண்டு தோறும் தேதி உலக சிட்டுக்குருவி தினம் கொண்டாடப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக இவைகளின் இனப்பெருக்கத்தை அதிகரிக்கும் நோக் கில் ஊட்டி அரசு கலைக்கல்லூரியில் விலங்கியல் மற் றும் வன விலங்கு உயிரியல் துறை சார்பில் செயற்கை கூடுகள் அமை த்து ஆய்வு மேற்கொள்ளும் திட்டத்தை துவக்கும் நிகழ்ச்சி இன்று நடக்கிறது. நிகழ்ச்சியில், வன விலங்கு உயிரியல் உதவி பேராசிரியர் ராமகிருஷ் ணன் தலைமையின் கீழ் பணியாற்றும் ஆராய்ச்சி மாணவர் ஜெயராமன், அடுத்த இரு ஆண்டுகளுக்கு சிட்டு குருவிகளுக்கான செயற்கை கூடுகளை நீலகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைத்து ஆய்வு மேற்கொள்ளவுள்ளார்.

## கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்

திருச்சி, : கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் முகாம் திருச்சி மாவட்டத்தில் இன்று (20ம் தேதி) துவங்கி 3 நாட்கள் நடைபெறுகிறது. திருச்சி மாவட்டத்தில் இலவச கறவை பசுக்கள் மற்றும் அனைத்து விதமான காளைகள், கன்றுகள், எருதுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி இன்று (20ம் தேதி) முதல் 22ம் தேதி வரை 3 நாட்கள் நடைபெறுகிறது. இதன்படி, இன்று (20ம் தேதி) பிராட்டியூர் (தெற்கு), லிங்கநகர், முத்தரசநல்லூர், கும்பக்குடி, திருவெறும்பூர் 64 மற்றும் 65வது வார்டு, ஆண்டாள்வீதி, சிந்தாமணி, அண்ணாசாலை, அம்மா பேட்டை,

அல்லித் துறை, அடைக்கம்பட்டி, கருமலை, டி.புதுப்பட்டி, வடுகப்பட்டி, நல்லாம்பிள்ளை, பேரூர், ஜெயங்கொண்டான், திண்ணனூர், மேட்டுப் பளையம், காட்டுப்புத்தூர் பேரூ ராட்சி, சின்னப்பள்ளி பாளை யம், கோம்பை, பெரகம்பி, சீதேவிமங்கலம், மால்வாய், சரடமங்கலம், ஆ.கண்ணனூர், மங்கம்மாள்புரம், ஆதிக்குடி ஆகிய பகுதிகளில் நடக்கிறது. நாளை (21ம் தேதி) பிராட்டியூர் (வடக்கு), லிங்கநகர், துவாக்குடி, கொத்தமங்கலம், நவலூர் கொட்டப் பட்டு, பொன்னம்பட்டி, கல்லகம்பட்டி, பன்னப்பட்டி கிழக்கு, நடுப்பட்டி, கூட்டத்தூர், காருக்குடி, கரிகாலி, ஊருடையான்பட்டி, பெரியபள்ளி பாளையம், உன்னியூர், அழகிய மனவாளம், மண்ணச்சநல்லூர் பேரூராட்சி ஒரத்தூர், கல்லகம், ஜெங்கமராஜபுரம், கீழன்பில், கலக்காம்பட்டி, கோட்டத்தூர் ஆகிய பகுதிகளில் முகாம் நடைபெறும். இதனைத் தொடர்ந்து, நாளை மறுநாள் (22ம் தேதி) அயன்ரெட்டியப் பட்டி, மணப்பாறை நகராட்சி, பூனாம் பாளையம், மாதவபெருமாள் கோவில்,காணக்கிளியநல்லூர், நஞ்சைசங்கேந்தி, வத்தலைகூடலூர், கொன்னைக்குடி, அரியூர், டி.கள்விக் குடி, ஊத்துக்குளி, திருமலைசமுத்திரம், சேதுராப்பட்டி, கிளியூர், அப்பநல்லூர் ஆகிய இடங்களிலும் நடைபெறுகிறது. எனவே, திருச்சி மாவட்டத்தில் கால் நடை வளர்ப் போர் இம்முகாம்களை பயன்படுத்தி பயன்பெறுமாறு கலெ க்டர் பழனிசாமி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## திருச்செந்துறையில் 1,513 வாழைத்தார்கள் ரூ.1.32லட்சத்துக்கு ஏலம்

திருச்சி,: திருச்செந்துறையில் 1,513 வாழைத்தார்கள் ரூ.1.32 லட்சத்துக்கு ஏலம் போனது.ஸ்ரீரங்கம் திருச்செந்துறை கிராமத்தில் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மூலம் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் வாழைத்தார் ஏலம் நடந்தது.கிளியநல்லூர், சிறுகாம்பூர், சென்னக்கரை, செங்குடி, குழுமணி, லால்குடி, அந்தநல்லூர்,

பெட்டவாய்த் தலை,பெருகமணி, குளித்தலை,தொட்டியம் ஆகிய கிராமங்களில் இருந்து 44 விவசாயிகள் தாங்கள் விளைவித்த வாழைத்தார்களுடன் ஏலத்தில் கலந்து கொண்டனர். பெருகமணி, சிறுகமணி, ஜீயபுரம், கடியாக்குறிச்சி, புத்தூர், கே.கே.நகர், ஏர்போர்ட், நம்பியூர், மணப்பாறை ஆகிய ஊர்களில் இருந்து மொத்தம் 17வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டு வாழைத் தார்களை ஏலம் எடுத்தனர். இதில் 1,513 வாழைத்தார்கள் ரூ.1,32,590 ஏலத்துக்கு விடப்பட்டது. இந்த ஏலத்தில் ரஸ்தாலி தார் ஒன்று அதிகபட்சமாக ரூ.260க்கும், பூவன் அதிகபட்சமாக ரூ.350க்கும், பச்சாலடன் ரூ.260க்கும், கற்பூரவள்ளி ரூ.130க்கும், மொந்தன் ரூ.270க்கும், ஏலரசி ரூ.175க்கும், நேந் திரன் ரூ.160க்கும் ஏலம் போனது. தரமான வாழைத்தார் நல்ல விலைக்கு ஏலம் போனது. இந்த ஏலத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் அனைவருக்கும் எந்த வித கமிஷனுமின்றி உடனுக்குடன் பணமும் பட்டுவாடா செய்யப்பட்டது.

## <u>கரூர் தாலுகா பகுதிகளில் மிளகாய் அறுவடை மும்முரம்</u>

கரூர், : கரூர் தாலுகா ஏமூர், முத்துலாடம்பட்டி, கணபதிபாளையம், போன்ற பகுதிகளில் மிளகாய் அறுவடை நடைபெறுகிறது. கரூர் பகுதியில் ஊடுபயிராக சில இடங்களில் ஆமணக்கு பயிரிடப் பட்டிருக்கிறது. இப்பகுதியில் சுமார் 10 ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள் ளது. கடும்பனி காரணமாக மிளகாய் செடியில் இலை சுருட்டு நோய் ஏற்பட்டது. தற்போது மிளகாய் அறுவடை நடைபெற்று வருகிறது. பொதுவாக கரூர் மாவ ட்டத்தில் பச்சை மிளகாய் நீர் இருப்பதை பொறுத்து பரவலாக விவசாயிகள் பயிர் செய்கின்றனர். மிளகாய் விதைத்ததில் இருந்து 75 நாட்களில் பச்சைக்காய்களை பறிக்கலாம். பொதுவாக பச்சை மிளகாய் என்றால் எக்டே ருக்கு 10முதல் 15டன் வரை கிடைக்கும். வத்தல் மிள காய் என்றால் எக்டேருக்கு 2முதல்

3 டன் வரை மகசூல் பெறலாம் என தோட்டக்கலைத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இலை சுருட்டு நோய் காரணமாக மிளகாய் செடிகள் பாதிக்கப்பட்டது. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், புழுவெட்டு கட்டுப்படுத்துவதற்காக மருந்து தெளிக்க வேண்டியதிருக்கிறது. தோட்டக்கலைத்துறை சார்பில் பொதுவாக எந்த ஆலோசனையும் வழங்குவதில்லை. மிளகாய் விதை மட்டும் ஒரு கிலோ ரூ.600 க்கு வெளி மார்க்கெட்டில் வாங்கி விதைக்கிறோம். அறுவடை செய்யும் வரை பல்வேறு செலவுகளை செய்து பயிரைக்காப்பாற்ற வேண்டியுள்ளது. நல்ல மகசூல் இருந்தால் 50 செ ன்ட் இடத்தில் 20 மூட்டை விளைச்சல் பெற லாம். ஒரு மூட்டை 100 கிலோ வீதம் 2 ஆயிரம் கிலோ மிளகாய் எடுக்கலாம். முன்பு மார்க்கெட் விலை கிலோ ரூ.50வரை போகும். ஆனால் தற்போது விலை குறைந்துவிட்டது. கடந்தாண்டு மின்தடைகாரணமாக தண்ணீர் பிரச்னையால் விளைச்சல் எடு க்க முடியவில்லை. இந்த ஆண்டு நல்ல விளைச்சல் இருக்கிறது. ஆனால் போதுமான விலை கிடைக்கவில்லை. உழவர் சந்தைகளில் கிலோ ரூ.18, ரூ.20 என விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு இதில் மிக குறைந்த தொகை தான் கிடைக்கும். வெளிகடைகளுக்கு விற்பனைசெய் தால் தான் கொஞ்சம் தொகை அதிகமாக கிடைக்கிறது. முன்பெல்லாம் மிள காய், தக்காளி செடி பயிரிட்டால் விளைச்சல் குறிப்பிட்ட காலத்தில் இருக்கும். ஆனால் தற்போது சீதோஷ்ணநிலை மாறுபடுகிறது. மழைக் காலத்தில் மழை பெய்வதில்லை போன்ற பிரச்னை காரணமாக எந்த பயிரை எந்தக்காலத்தில் பயிரிடுவது என்கிற குழப் பம் ஏற்படுகிறது. தோட்டக்கலைத்துறையினர் தக்க ஆலோசனைகளை இனியா வது விவசாயிகளுக்கு வழங்கி நல்ல விலை கிடைப்பதற்கு உதவ வேண்டும் என்றனர்.

## செட்டிக்குளம் வணிக வளாகத்தில் 5 டன் சின்ன வெங்காயம் ரூ. 54,000க்கு விற்பனை5 டன் சின்ன வெங்காயம் ரூ. 54,000க்கு விற்பனை

பெரம்பலூர், : பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தரேஸ்அகமது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிக்குளத்தில் உள்ள வெங் காய வணிக வளாகத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை யின் மூலம் திறந்தமுறை ஏலம் நடத்தப்பட்டது. இதில் சத்திரமனை, அம்மா பாளையம், இரூர், செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், கூத்தனூர், சீதேவிமங்கலம், பொம்மனப்பாடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 18 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தினை திறந்த முறை ஏலத்திற்குக் கொண்டுவந்து விற்பனை செய்தனர். புதுச்சேரி, குரூர், சீதேவிமங்கலம், சத்திரமனை, துறையூர் ஆகியப் பகுதிகளைச் சேர்ந்த 5 வியாபாரிகள் 66 மூட்டை, அதாவது 5,420 கிலோ சின்ன வெங்காயத்தினை ஏலத்தில் எடுத்தனர். சின்ன வெங்காயம் புதியது அதிகபட்சமாக கிலோ ரூ. 18.50க் கும், விதை வெங்கா யம் அதிகபட்சமாக கிலோ ரூ. 17க்கும், சராசரியாக ஒரு கிலோ ரூ. 10க்கும் விற்பனையானது. இதன் மூலம் ரூ. 53,552க்கு விற்பனை நடைபெற்றது. அனைத்து விவசாயிகளுக்கும் பணம் உடனடியாக வழங்கப்பட்டது. இவ்வணிக வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் திறந்தமுறை ஏலம் நடைபெற்று வருகிறது. விவசாயிகள் தங்களது வெங்காய விளை பொருளை நன்கு சுத்தப்படுத்தி, தரம்பிரித்து குறிப்பிட்ட நாட்க ளில் காலை 10 மணிக்குள் கொண்டுவந்து விற்பனைசெய்து பயன்பெறலாம் என கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## அரியலூர் மாவட்டத்தில் நிலக்கடலை அறுவடையில்

விவசாயிகள் தீவிரம்'மானியத்தில் உரம் வழங்க வேண்டும்' அரியலூர் மாவட்டத்தில் நிலக்கடலை விவசாயிகளுக்கு வேளாண்மை துறை சார்பிலும், கூட்டுறவு சொசைட்டி சார்பிலும் மானிய விலையில் உரங்கள் கிடைப்பதில்லை. ஒரு சில விவசாயிகளை மட்டுமே தேர்வு செய்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எல்லா விவசாயிகளுக்கும் தேவையான பயிர் பாதுகாப்பு உரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கை. அரியலூர்,: அரியலூர் மாவட்டத்தில் தற்போது நிலக்கடலை அறுவடை பணிகளை விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் 80 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூ. 6 ஆயிரம் வழங்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்திற்கு விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். அரியலூர் மாவட்டத்தில் தா.பழூர் வட்டாரத்தில் சுத்தமல்லி, ஆலம்பள்ளம், காசான்கோட்டை, கார்குடி, கோரைக்குழி, காடுவெட்டான்குறிச்சி, நடுவலூர், காரைக்குறிச்சி, ஸ்ரீபுரந்தான், கோவிந்தப்புத்தூர், ஆதிச்சனூர், சுந்தரேசபுரம், அணிக்குறிச்சி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் நிலக்கடலை சாகுபடி செய்துள்ளனர். இந்த பகுதிகளில் நன்றாக விளைந்துள்ள நிலக்கடலை தற்போது அறுவடை செய்யப்படும் நிலையில், போதிய விளைச்சல் இருந்தாலும் கடலைக்கான நிர்ணய விலை குறைவாக கிடைக்கிறது. இதனால் நட்டம் ஏற்படுவதாக விவசாயிகள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர். கடந்தாண்டு உடைத்த மணிலா 80 கிலோ ஒரு மூட்டைக்கு ரூ. 4,500 முதல் ரூ.5,000 ஆயிரம் வரை விற்றது. இந்தாண்டாவது கடலைக்கான விலையை உயர்த்தினால் தான் விவசாயிகளுக்கு ஏற்படும் நட்டத்தை தவிர்க்க முடியும் என்று தா.பழூர் வட்டார விவசாயிகள் தெரிவித்து வருகின்றனர். இதுகுறித்து

அப்பகுதி விவசாயிகள் தெரிவித்ததாவது: இந்தாண்டு எதிர்பார்த்தபடி மழை பொய்த்தால் நிலக்கடலையை பயிரிட்டோம். கூடுதல் ஊடுபயிராக செடி முருங்கையும் பயிரிட்டோம். நிலக்கடலை ஒரு ஏக்கர் பயிரிடுவதற்கு உரச்செலவு, உழவோட்டுதல், பயிர் பாதுகாப்பு, ஆட்கூலி என பல்வேறு வகையில் ரூ. 25 ஆயிரம் செலவாகிறது. ஆனால் ஒரு ஏக்கருக்கு 30 மூட்டை முதல் 35 மூட்டை வரைதான் மகசூல் கிடைக்கிறது. நன்றாக விளைந்தால். 40 மூட்டை கிடைக்கும். கடந்த ஆண்டு உடைத்த மணிலா மூட்டை (80 கிலோ) ஒன்று ரூ. 5 ஆயிரம் வரை விலை போனது. ஆனால் அந்த விலை எங்களுக்கு கட்டுபடியாகவில்லை. இந்த ஆண்டு விலை ஏற்றுவதாக பேசப் பட்டு வருகிறது. அறுவடைசெய்த கடலையை 25 கி.மீ தொலைவிலுள்ள ஜெயங்கொண்டம் கடலை கமிட்டிக்குத்தான் எடுத்த செல்ல வேண்டும். கடலையை ஏற்றி செல்லும்போது வாடகை கூலி என பல்வேறு வகையில் எங்களுக்கு செலவாகிறது. எனவே மணிலா மூட்டை ஒன்றுக்கு ரூ. 6 ஆயிரம் வழங்கினால்தான் எங்களுக்கு கட்டுபடியாகும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## தா.பழூர் விவசாயிகள் களப்பயணம்

அரியலூர், : அட்மா திட்ட த்தின் சார்பில், தா.பழூர் விவசாயிகள் நேற்று களப்பயணம் மேற்கொன்டனர். அரியலூர் மாவட்டம் தா.பழூர் வட்டார வேளா ண்மை துறை சார்பில், அட்மா திட்டத்தின் கீழ், விவசாயிகள் நேற்று வெளி மாவட்டத்தில் ஒரு நாள் வேளாண்மை களப்பயணம் சென்றனர். இந்த பயணத்தின்போது, பட்டுக்கோட்டை வேளாண் ஆராய்ச்சி மையத்திலுள்ள பாமாயில் சாகுபடி மற்றும் வேப்பங்குளத்தில் உள்ள தென்னை பண்ணை சாகுபடியிலுள்ள தொழில் நுட்பங்களை விவசாயிகள் பார்வையிடுகின்றனர். அங்கு பாமாயில் மற்றும் தென்னை சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரிகள் பயிற்சி வழங்குகின்றனர். அட்மா திட்ட தொழில் நுட்ப மேலாளர் சகாதேவன் மற்றும் உதவி மேலாளர் உஷா ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை

செய்து ள்ளனர். தா.பழூர் வட்டாரத்தை சேர்ந்த 25 விவசாயிகள் இந்த களப்பயணத்தில் சென்றனர்.

## பண்ணை மகளிர் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கும் விழா

குன்னம், : பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தாலுகா வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் பண்ணை மகளிர் மேம்பாட்டு குழுக்களுக்கு வேளாண் துறை சார்பில் சுழல் நிதி வழங்கும் விழா நடைபெற்றது. ஒன்றிய குழு தலைவர் கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். அட்மா திட்ட விவசாயிகள் ஆலோசணை குழு தலைவர் மணி, வேளாண் உதவி இயக்குனர் மனோகரன் முன்னிலை வகித்தனர். ஒன்றியக்குழு தலைவர் கிருஷ்ண குமார் சுழல்நிதியை வழங்கி பேசுகையில், விவசாயிகள் வேளாண்மைத் துறையின் ஆலோசனையை பெற்று, இந் நிதியை பயன்படுத்தி, தங்களுடைய நிலத்தில் விதை பண்ணை அமைத்து தரமான விதை உற்பத்தி செய்து அந்த விதையின் மூலம் சாகுபடி செய்து விவசாயத்தில் அதிக மகசூலை பெற்று மும்மடங்கு வருமானம் பெற வேண்டும் என்று கூறினார். இதனைத் தொடர்ந்து, வேளாண் துறை அதிகாரிகள் ஒருங்கிணைந்த பண்ணையத்தின் நன்மைகள் மற்றும் பயன்களை எடுத்து கூறினர். ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்பக்குழு வல்லுனர்கள் அதிரூபன், பிரபாகரன் செய்திருந்தனர். இதில் விவசாயிகள் மற்றும் வேளாண் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண் டனர். முன்னதாக, அட்மா திட்ட தொழில் நுட்ப மேலாளர் நல்லதம்பி வரவேற்று முடிவில் நன்றி கூறினார்.

## கால்நடை மருத்துவ முகாம்

பொன்னமராவதி, : பொன்னமராவதி அருகே கேசராபட்டியில் கால்நடை சிறப்பு மருத்துவ முகாமில் கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. ஊராட்சித்தலைவர் முருகேசன் முகாமை தொடங்கி வைத்தார். ஆலவயல் அரசு கால்நடை மருத்துவமனை டாக்டர் சேரன்செங்குட்டுவன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் கண்டியாநத்தம், கேசராபட்டி,

புதுப்பட்டி, பூதன்வளவு ஆகிய கிராமங்களில் உள்ள ஆடுகளுக்கு கோமாரி தடுப்பூசிகள் போட்டனர். இதில் ஒன்றியக்கவுன்சிலர் கமர்தீன், துணைத்தலைவர் செல்லையா, ஊராட்சி உறுப்பினர்கள் ராமச்சந்திரன், அடைக்கி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## <u>கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கும் முகாம்</u>

கீழ்வேளூர், : நாகை மாவட்டம் கீழ்வேளூரை அடுத்த நாங்குடியில் அட்மா திட்டத்தின்கீழ் கால்நடைகளுக்கு மலட்டு தன்மை சிகிச்சை மற்றும் குடற்புழு நீக்கம் முகாம் நடைபெற்றது. முகாமில் மாடுகளுக்கு மலட்டு தன்மை நீக்க சிகிச்சை மற்றும் குடற்புழு நீக்கம் சிகிச்சை அளிக்கப்பட்டது. முகாமில் நாகை உழவர் பயிற்சி நிலைய பேராசிரியர் முருகன், கீழ்வேளூர் கால் நடை மருத்துவர் வாஞ்சிநாதன், வேளாண் உதவி இயக்குனர் உதயகுமார், முன்னோடி விவசாயி ஜீவா, கால்நடை ஆய்வாளர் தனசேகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>கூடாரத்தில் அதிக ஆட்டுக்குட்டிகளை அடைக்காதீர்...! கால்நடை பராமரிப்பு அறிவுரை</u>

சிவகங்கை, : கூடாரங்களில் (கிடாப்) அதிக ஆட்டுக்குட்டிகளை (கிடாப்) அடைத்தால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு இறக்கும் வாய்ப்பு உள்ளதால் அவ்வாறு செய்யக்கூடாது என கால்நடை பராமரிப்புத்துறை அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து சிவகங்கை கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கூறப்பட்டுள்ளதாவது, ‘ஆடு வளர்ப்போர் இளம் ஆட்டுக்குட்டிகளை குறிப்பாக செம்மறி ஆட்டுக்குட்டிகளை பனை ஓலை யால் வேய்ந்த கிடாப்பில் அடைக்கின்றனர். இவ்வாறு செய்யும்போது சிலர் அதிகமான குட்டிகளை உள்ளே அடைத்து விடுகின்றனர். இதனால் ஆட்டுக்குட்டிகள் மூச்சுத்திணறி இறந்து விடுகின்றன. இதுதவிர மழையில் நனையாமல் இருப்பதற்காக கிடாப்பின் மீது பாலித்தீன் தார்ப்பாய் போன்ற பொருட்களை போடுகின்றனர். இதனாலும் காற்று உள்ளே போக முடியாமல் குட்டிகள் இறந்துவிடுகின்றன. எனவே

இவ்வாறு செய்யக்கூடாது. குட்டிகளை அடைப்பதில் கவனத்துடன் செயல்பட வேண்டும்’. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## <u>மண்புழு உரம் தயாரிக்கும் வசதி என்.எல்.சி. தலைவர் தொடங்கி வைத்தார்</u>



நெய்வேலியில் நடந்த நிகழ்ச்சியில் மண்புழு உரம் தயாரிக்கும் வசதியை தொடங்குவதற்கான கல்வெட்டை என்.எல்.சி. தலைவர் சுரேந்தர்மோகன் திறந்து வைத்த போது எடுத்த படம்.

நெய்வேலியில் மண்புழுவை பயன்படுத்தி இயற்கை உரம் தயாரிக்கும் வசதியை என்.எல்.சி. தலைவர் தொடங்கி வைத்தார்.

இயற்கைஉரம்

நெய்வேலி அமராவதி நாற்றங்கால் பண்ணையில் தோட்டக்கலைத்துறை சார்பில் மண்புழு உரம் தயாரித்து விற்பனை செய்யும் வசதி ஏற்படுத்தப் பட்டது. இதனை என்.எல்.சி. தலைவர் சுரேந்தர்மோகன் தொடங்கி வைத்தார். இந்த உரமானது 2 கிலோ, 5 கிலோ பாக்கெட்டுகளில் ரூ.10 மற்றும் ரூ.25 என்ற விலையில் விற்கப்படுகிறது.

புதியஉணவகம்

இதனை தொடர்ந்து மத்திய பாதுகாப்பு படையின் தீயணைப்பு பிரிவுக்காக ரூ.30 லட்சம் செலவில் பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட உணவக வசதியையும் என்.எல்.சி. தலைவர் சுரேந்தர்மோகன் திறந்து வைத்தார். இந்த உணவகம் நெய்வேலியில் முன்பு செயல்பட்டு வந்த உரத்தொழிற்சாலை வளாகத்தில் சுமார் 5 ஆயிரம் சதுர அடிப்பரப்பில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில்

என்.எல்.சி. இயக்குனர்கள் சரத்குமார் ஆச்சார்யா, ராஜகோபால், பூபதி, கபீர்தாஸ் மற்றும் உயர்அதிகாரிகள் பணியாளர்கள் பங்கேற்றனர். மகளிர்கலையரங்கம்

மேலும், நெய்வேலி மகளிர் மன்றத்துக்காக ரூ.21 லட்சம் மதிப்பீட்டில் அம்மன்ற வளாகத்தில் கட்டப்பட்ட கலையரங்கத்தையும் சுரேந்தர் மோகன் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அதிகாரிகளுடன் நெய்வேலி மகளிர் மன்றத்தலைவி சுவர்ணகுமாரி சுரேந்தர்மோகன் மற்றும் மன்ற பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## இலவச ஆடுகள் பெற்ற 380 பயனாளிகளுக்கு பராமரிப்பு நிதி கலெக்டர் வழங்கினார்



தேனி, தமிழக அரசின் கால்நடை பராமரிப்பு துறை மூலமாக ஏழை, எளிய குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு இலவசமாக தலா 4 ஆடுகள் வீதம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு ஆடுகள் பெற்ற பயனாளிகளுக்கு அந்த ஆடுகளை பராமரிப்பு செய்ய ஒரு ஆட்டிற்கு ரூ.500 வீதம் 4 ஆடுகளுக்கும் சேர்த்து ஒரு பயனாளிக்கு ரூ.2 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி தேனி மாவட்டத்தில் இலவச வெள்ளாடுகள் பெற்ற 380 பயனாளிகளுக்கு பராமரிப்பு நிதி வழங்கும் விழா தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. விழாவிற்கு மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் தலைமை தாங்கி, 380 பயனாளி களுக்கு மொத்தம் ரூ.7 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பில் பராமரிப்பு நிதியை வழங்கி பேசினார். இந்நிகழ்ச்சியில் பெரியகுளம் எம்.எல்.ஏ. லாசர், கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் தனசேகரன், தேனி நகர்மன்ற தலைவர் முருகேசன், துணைத்தலைவர் காசிமாயன் மற்றும்

அரசின் பல்வேறு துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## 1 லட்சம் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது கால்நடைத்துறை உதவி இயக்குனர் தகவல்



மன்னார்குடி ஒன்றியத்தில் 1 லட்சம் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்று கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குநர்தெரிவித்துள்ளார்.

கோமாரிநோய்தடுப்பூசி

வடுவூர் அருகே உள்ள தளிக்கோட்டையில் கால்நடை மருத்துவ துறையும், மிட்டவுன் ரோட்டரி சங்கமும் சேர்ந்து மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாமை நடத்தின. இதில் 500-க்கும் மேற்பட்ட மாடுகளுடன் ஏராளமான பயனாளிகள் வந்து பயன்பெற்று மாடுகளுக்கு என்னனென்ன நோய்கள் தாக்குகின்றன, மாடுகளை நோய்கள் தாக்காமல் எப்படி பாதுகாத்து கொள்வது பற்றிய தகவல்களை கேட்டறிந்தனர்.முகாமில் மிட்டன் ரோட்டரி சங்க தலைவர் பாலகிருஷ்ணன், டாக்டர்கள் பிரேம்குமார், தளிக்கோட்டை கால்நடை மருத்துவர் ஜெயபாலன், சிவா, மகேந்திரன், ராஜேஸ், தேவராஜ், ஊராட்சி மன்ற தலைவர் சுந்தரமூர்த்தி, மருத்துவ உதவியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.பின்னர் மன்னார்குடி கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குநர் லூர்துசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

மருத்துவகுழு

தமிழக அரசு அறிவித்த படி ஆண்டிற்கு 2 முறை மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டு வருகிறது. மன்னார்குடி ஒன்றியத்தில் உள்ள மாடுகளை கணக்கெடுத்து அவைகளை

நோய்களிலிருந்த பாதுகாக்க வேண்டி 4 பேர் கொண்ட மருத்துவ குழு ஒவ்வொறு ஊராட்சிக்கும் சென்று அங்கு எத்தனை மாடுகள் இருக்கின்றன. அவைகளுக்கு எந்த மாதிரியான நோய்கள் தாக்குகின்றன போன்றவைகளை கண்டறிந்து பயனாளிகளிடம் மாடுகளை எப்படி பராமரிப்பது பற்றி விளக்கம் அளித்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் மன்னார்குடி ஒன்றியத்தில் மொத்தம் 1 லட்சத்து 20ஆயிரம் மாடுகள் உள்ளது தடுப்பூசி போடுவதற்கு 9 சுற்றுகளாக பிரிக்கப்பட்டு தற்போது 8 சுற்றுகள் முடிவடைந்துள்ளது. 9-வது சுற்று செப்டம்பர் மாதம் 1-ந் தேதி தொடங்கி 21-ந் தேதி வரை நடத்தப்படும். இதுவரை 1 லட்சத்து 19ஆயிரம் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.